ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2482/09 - 2026 මාර්තු මස 31 වැනි අඟහරුවාදා - 2026.03.31

*2482/09 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சிறப்புப் பண்ட அறவீட்டுச் சட்டம்

பிரிவு 2 மற்றும் 5 இன் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சிறப்புப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இந்த உத்தரவின் மூலம், இந்த அட்டவணையின் நிரல் (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பாக, அந்த அட்டவணையின் நிரல் (II) இல் உள்ள தொடர்புடைய பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் சிறப்புப் பண்ட அறவீடொன்றினை விதிக்கிறேன்.

**அட்டவணை**

| | *நிரல் I* | | | *நிரல் II* |
|---|---|---|---|---|
| | *பண்டம்* | | | *சிறப்புப் பண்ட அறவீடு* |
| | *எச். எஸ். தலைப்பு* | *எச். எஸ். குறியீடு* | *விபரம்* | |
| 1. | 08.01 | 0801.11.90 | பிற - உலர்த்தப்பட்ட தேங்காய்கள் | ரூ. 320.00/கி.கி. |
| 2. | 25.01 | 2501.00 | உப்பு (சபையல் உப்பு மற்றும் இயல்பிழந்த உப்பு உட்பட) மற்றும் தூய சோடியம் குளோரைடு, அவை திரவக் கரைசலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அல்லது கட்டியாகாமல் தடுக்கும் அல்லது எளிதில் பாயும் தன்மையுள்ள காரணிகள் சேர்க்கப்பட்டிருந்தாலும் சரி; கடல் நீர். | |

1A - PG 7588 - 428 (2026/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** (தொடர்ச்சி)

| | நிரல் I | | | நிரல் II |
|---|---|---|---|---|
| | பண்டம் | | | சிறப்புப் பண்ட அறவீடு |
| | எச். எஸ். தலைப்பு | எச். எஸ். குறியீடு | விபரம் | |
| | | 2501.00.10 | இந்துப்பு (கல் உப்பு) | ரூ. 40.00/கி.கி |
| | | 2501.00.90 | பிற | ரூ. 40.00/கி.கி. |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சிறப்புப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, பின்வருவனவற்றைத் தள்ளுபடி செய்ய நான் இதன்மூலம் உத்தரவிடுகிறேன்:-

(i) தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைக்குட்பட்டு, இறக்குமதி உரிமத் தேவையின் பேரில், உள்நாட்டுத் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நோக்கத்திற்காக, 0801.11.90 என்ற இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட, வெளிப்புற பழுப்பு நிற ஓட்டுடன் கூடிய (கொப்பரா நீங்கலாக) உலர்த்தப்பட்ட தேங்காய் நறுக்குத் துண்டுகளை இறக்குமதி செய்வதன் மீது விதிக்கப்படும், கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 320.00 என்ற சிறப்புப் பண்ட அறவீட்டினை கிலோ கிராம் ஒன்றுக்கு 10.00 ரூபாவாக அறவிட்டதன் பின்னர் மீதமுள்ள தொகை.

(ii) சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், மருந்துகளை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துகை அதிகாரசபையினால் (National Medicines Regulatory Authority - NMRA) அல்லது ஆயுர்வேத ஆணையாளர் நாயகத்துடன் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் மருந்து உற்பத்தி நிறுவனத்தால், 25.01 என்ற இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உப்பை (சோடியம் குளோரைடு BP) இறக்குமதி செய்வதன் மீது விதிக்கப்படும், கிலோ கிராம் ஒன்றுக்கு 10.00 ரூபாவாக அறவிட்டதன் பின்னர் மீதமுள்ள தொகை.

3. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சிறப்புப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் மேற்கண்ட கட்டளை இல. 1 மற்றும் 2, என்பன அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்குட்பட்டு, 2026, ஏப்பிறல் 01 முதல் 2026, திசெம்பர் 31 வரை அமுலிலிருக்கும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும்
பொருளாதார அபிவிருத்தி
அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2026, மாச்சு 31.

EOG 04 - 0006

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.